# கதம்பம்

ஆகஸ்ட் 2023

திருவள்ளுவர் ஆண்டு 2054

## செனட்டர் சியோபானுடன் சந்திப்பு



செனட்டர் சியோபன்

## இந்த இதழில்...


03 அறிவிப்பு மடல்

07 குறளும் பொருளும்

10 திரையும் இசையும்

11 மனிதக்குலத்தின் பெருமை

12 சிறுவர்களிடம் பேசுவது எப்படி?

16 என் பார்வையில் அமெரிக்கா

18 ஒரு காதல் முடிவு

19 ஜெயிலர் - திரைவிமர்சனம்

21 ஓவியப் போட்டியின் புகைப்படங்கள்

23 குழந்தைகளின் ஓவியங்கள்

28 தமிழ் பள்ளி புகைப்படங்கள்

29 நன்றி உரை


(பக்கத்திற்குச் செல்ல தலைப்பைக் கிளிக் செய்யவும்)


இரிச்மண்டு
தமிழ்ச்சங்கம்
WOMEN'S
THROWBALL
TOURNAMENT
மகளிர் ஏறிபந்து போட்டி
Sponsored by Aaha Indian Kitchen
SEPTEMBER 16, 2023
STARTS AROUND 7:00 AM EST
REGISTRATION FEES
RTS Members $10
Non-Members $15
TWIN HICKORY PARK
முன்பதிவு ஆரம்பம்
(Registration starts )
Registration Closes on Sep 5 2023
https://www.richmondtamilsangam.org/women-throwball-2023
scan me!

இரிச்மண்டு
தமிழ்ச்சங்கம்

# MEN'S VOLLEYBALL TOURNAMENT

ஆடவர் கைப்பந்து போட்டி



Sponsored by Aaha Indian Kitchen

**SEPTEMBER 16 & 17, 2023**
**1ST ROUND OF LEAGUE GAMES**
**STARTS 3:30 PM ONWARDS**

**REGISTRATION FEES**

- RTS Members $10
- Non-Members $15

## TWIN HICKORY PARK

முன்பதிவு ஆரம்பம்
(Registration starts )
Registration Closes on Sep 5 2023

https://www.richmondtamilsangam.org/mens-volleyball-2023

*scan me!*

# இரிச்மண்டு தமிழ் சங்க சகோதர சகோதரிகளே,




## ஆண்களுக்கான கைப்பந்து போட்டி

**பதிவு செய்வதற்கான கடைசி தேதி செப்டம்பர் 5, 2023**

ரிச்மண்டு தமிழ் சங்கம் வரும் செப்டம்பர் 16 & 17 2023 தேதிகளில் ஆண்களுக்கான கைப்பந்து போட்டியை நடத்துகிறது.

பதிவு செய்ய கீழே உள்ள இணைப்பைப் பயன்படுத்தவும் **https://www.richmondtamilsangam.org/mens-volleyball-2023**

## பெண்களுக்கான எறிபந்து போட்டி

**பதிவு செய்வதற்கான கடைசி தேதி செப்டம்பர் 5, 2023**

ரிச்மண்டு தமிழ் சங்கம் வரும் செப்டம்பர் 16 2023 தேதியில் பெண்களுக்கான எறிபந்து போட்டியை நடத்துகிறது.

பதிவு செய்ய கீழே உள்ள இணைப்பைப் பயன்படுத்தவும் **https://www.richmondtamilsangam.org/women-throwball-2023**

**இந்த செய்திமடலில் உள்ள அனைத்து குழந்தைகளின் புகைப்படங்களும் எங்கள் ஆர்டிஎஸ் நிகழ்வுகளிலிருந்து எடுக்கப்பட்டவை. உங்கள் குழந்தைகளின் புகைப்படங்களைச் சேர்க்க விரும்பினால், எங்கள் செய்திமடல் மின்னஞ்சலுடன் பகிர்ந்து கொள்ளவும். மேலும் தகவலுக்கு 29வது பக்கத்தில் நன்றி உரையைப் பார்க்கவும். நன்றி!**




# ADULT CULTURAL EVENT

| | |
|---|---|
| GROUP DANCE, GROUP SINGING, ANY TRADITIONAL TAMIL CULTURAL EVENT, FASHION SHOW, DEBATE AND MORE | GET READY TO SHOWCASE YOUR TALENTS |

**OCTOBER 14 | FROM 4:30 PM TO 8 PM**

Location:

**POCAHONTAS MIDDLE SCHOOL**

**REGISTRATION LINK COMING SOON...**

# சாப்பாட்டுக்கு முன், சாப்பிட்ட பின்

## [ கு ற ளு ம்   பொ ரு ளு ம் ]



உலகம் முழுக்க "பெரிய" நோயாக மாறி வருவது உடல் எடை கண்ணா பின்னான்னு கூடிப் போவது.

பல காரணிகள் இதற்கு இருந்தாலும் தேவைக்கு மேல் உண்பது பெரிய காரணமாக இருக்கிறது. உணவுப் பற்றாக்குறையை அறிவியலின் துணை கொண்டு வென்று விட்டோம். மனித வரலாற்றில் உணவு இவ்வளவு எளிதில் எப்போதும் கிடைத்ததில்லை. ஆனாலும் பஞ்சங்கள் பல கண்ட மனிதன், உணவைப் பார்த்ததும் பாய்ந்து விடுகிறான்.

இன்றைக்கு கைக்கு எட்டிய தொலைவில் எப்போதும் ஏதோ ஒன்று தின்பதற்கு இருக்கிறது. இனிப்பாக, காரமாக, உப்பாக என சுவையாக ஏதோவொன்று நினைத்த போதெல்லாம் தின்பதற்கு பக்கத்திலேயே வைத்திருக்கிறோம். தின்று தின்றே ஒரு வழியாகிறோம்.

போதாக்குறைக்கு தூக்கம் என்பதை ஏதோ நேரத்தை வீணடிக்கும் ஒன்றாக நினைத்து தூங்கும் நேரத்தை வெகுவாகக் குறைத்துக் கொண்டோம். உடலுக்குத் தேவையான ஓய்வைக் குறைத்து, தேவைக்கும் அதிகமான உணவை உள்ளே தள்ளி பெருத்துப் போய் விடுகிறோம். மருத்துவர்களும் ஆய்வாளர்களும் இந்தப் போக்கை சரி செய்யச் சொல்லி மன்றாடுகிறார்கள்.

நம் நண்பர் மருத்துவர் பழனியப்பன் மாலை மங்குவதற்குள் உண்டு முடித்து பின் கொஞ்சம் சுறுசுறுப்பாக இருந்து நல்ல உறக்கம் கொள்ளுங்கள்; நலம் கொடுக்கும் உணவை கவனமாக, அளவாக உண்டு நோயைத் தவிருங்கள் மருந்தின்றி நல்வாழ்வு வாழலாம் என ஒரு முழு நீள தொலைக்காட்சித் தொடரே கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

கேட்போர் கேட்கட்டும், கேட்டு நல்லபடியாக நடப்போர் நடக்கட்டும். கேளாதோர் மருத்துவமனைக்கு நடக்க வேண்டியிருக்கும்.



ஏன் நலம் கொடுக்க வேண்டிய உணவே உடலைக் கெடுக்கும் நஞ்சாகிறது? உண்பது மகிழ்வாக இருக்கிறது ஆனால் தீங்கு விளைவிக்கிறதே ஏன்? குறைவாக உண்டாலும் சிக்கல், நிறைய உண்டாலும் சிக்கலாகிறதே ஏன்?

பதில் சொல்கிறார் ஐயன் வள்ளுவர்.

மருந்து என ஒரு அதிகாரம் நட்பியலின் கீழ் எழுதுகிறார். அதன் பத்து குறள்களில் ஏழு குறள்கள் உணவைப் பற்றியது. கிட்டத்தட்ட எல்லா குறள்களிலும் அவர் அழுத்தி அழுத்திச் சொல்வது "அளவோடு உண்" என்பதைத்தான்.

நம் விருப்பத்திற்கு ஏற்ற உணவை உண்ணலாம். புலால் வேண்டாம் என அவர் வலியுறுத்துவது துறவற இயலில், துறவிகளுக்கு. மற்றவர்களுக்கு அவர் சொல்லும் கட்டுப்பாடு உணவின் அளவு மீதுதான். மரக்கறி உணவோ புலால் உணவோ, அளவோடு உண்டால் சிக்கலில்லை.



சாப்பிட்ட சாப்பாடு செரிச்சுதா என கவனிச்சு செரிச்சபின் அடுத்த முறை சாப்பிடுவது நீண்ட நாள் நல்லபடியாக வாழ்வதற்கான வழி; செரிச்சு இருந்தாலும் பசித்த பின் சாப்பிடு; மிகப் பிடிச்ச உணவு என்றாலும் கூட "போதும்" என அளவோடு சாப்பிட்டால் துன்பமில்லை, பெருந்தீனி தின்பவர் நோய்க்கு ஆளாவது தவிர்க்கவே முடியாத ஒன்று என தலையில் குட்டாத குறையாக சொல்கிறார்.

மருந்து என பெயர் கொண்ட அதிகாரமில்லையா, மருந்தைப் பற்றி சொல்லாமல் இருப்பாரா? சொல்கிறார். அதில் ஒன்று,



என்ன சாப்பிட்டோம், சாப்பிட்டது ஒழுங்காகச் செரித்ததா என்பதை கவனத்தில் கொண்டு அடுத்த வேளை சாப்பாட்டுக்குக் கை கழுவினாய் என்றால், மருந்து என்பதே உன் உடலுக்குத் தேவைப்படாது என்கிறார்.

# மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்



மருந்தென வேண்டாவாம் = மருந்து என்பதே தேவையில்லை
யாக்கைக்கு = உடலுக்கு
அருந்தியது = உண்டது
அற்றது = செரித்தது
போற்றி = கவனத்தில் கொண்டு
உணின் = உண்டால்

"உண்டதையும், செரித்ததையும் கவனத்தில் கொண்டு சாப்பிட்டு வருவோர்க்கு மருந்து என்பதே தேவையில்லை" என்கிறார்.

நல்ல சாப்பாட்டை அளவோடு சாப்பிட்டு வருவோர்க்கு "சாப்பிடும் முன், சாப்பிட்ட பின்" என எந்த மருந்தும் தேவைப்படாது.

ஐயன் வள்ளுவராகட்டும் மருத்துவர் பழனியப்பனாகட்டும், அவர்கள் சொல்வதெல்லாம் "போதும் என்ற வயிரே பொன்னுடல் போற்றும் வழி" என்பதுதான். வாயைக் கட்டி, வயிற்றையும் கட்டி உடலையும் ஆயுளையும் கெட்டியாக்குவோம்.

-உள்ளூர்காரன்

# திரையும் இசையும் - ரேவதி

Arohanam: S R1 M1 P N2 S
Avarohanam: S N2 P M1 R1 S

இந்த 2 ஆம் மேளகர்த்தா ராகம் ரத்னாங்கியின் வம்சத்தில் வரும் ராகமாக கருதப்படுகிறது.


இது ஒரு தொன்மை வாய்ந்த ராகமாக இருப்பினும், கர்நாடக இசையின் மும்மூர்த்திகள் இந்த ராகத்தில் பாடல்கள் அமைத்ததாக குறிப்பு இல்லை. சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்களின் போ ஷம்போ, புரந்தர தாஸரின் ஹரி நாராயண, தஞ்சாவூர் சங்கர ஐயரின் மஹாதேவ ஷிவ, அன்னமாச்சார்யாவின் நானாடி பதுகு போன்ற பாடல்கள் பிரபலமானவை.

திரைப்படங்களில், இந்த ராகத்தை தழுவி அமைந்த பாடல்களில் சில:

| திரைப்படம் | பாடல் | இசையமைப்பாளர் |
|---|---|---|
| அவன் அவள் அது | இல்லம் சங்கீதம் | எம். எஸ். விஸ்வநாதன் |
| மணல் கயிறு | மந்திரப் புன்னகை | எம். எஸ். விஸ்வநாதன் |
| மேகத்துக்கும் தாகம் உண்டு | மரகத மேகம் | எம். எஸ். விஸ்வநாதன் |
| உன்னிடத்தில் நான் | நினைத்தால் உன்னைத்தான் | தாயன்பன் |
| வா இந்தப் பக்கம் | ஆனந்த தாகம் | ஷியாம் |
| ஒரு ஓடை நதியாகிறது | கனவு ஒன்று | இளையராஜா |
| காதல் ஓவியம் | சங்கீத ஜாதி முல்லை | இளையராஜா |
| இது நம்ம ஆளு | கண்ணுறங்கு | கே. பாக்கியராஜ் |
| கிளிஞ்சல்கள் | விழிகள் மேடையாம் | டி ராஜேந்தர் |
| வாட்ச்மேன் வடிவேல் | சந்திரனும் சூரியனும் | தேவா |
| பூமணமே வா | என்னைத் தொட்டு விட்டு | சிற்பி |
| செண்பக தோட்டம் | சின்ன சின்ன பாவாடை | சிற்பி |
| நான் அவன் இல்லை | காக்க காக்க | விஜய் அந்தோணி |

தொகுப்பு : நாராயணன் சுப்ரமணியன்

# மனிதக்குலத்தின் பெருமை



கண்களை மூடிக் கொண்டு தைரியம் தேடும் வீரன்

செவியைப் பூட்டிக் கொண்டு வினா எழுப்பும் அறிஞன்

கைகளை மடக்கிக் கொண்டு வண்ணம் தீட்டும் ஓவியன்

வாய் வழி விரதம் கொண்டு பாடல்களை ஒளித்திடும் பாடகன்

கால்களால் உட்கார்ந்து கொண்டு நடனம் அசைத்திடும் கலைஞன்

மூளையை முடக்கிக் கொண்டு அறிவியல் கற்பித்திடும் விஞ்ஞானி

முகத்தை மறைத்துக் கொண்டு நடிக முயன்றிடும் நடிகன்

தனக்கு அமைந்ததில் எதைவேணுமானாலும் பயன்படுத்தாமல்

புறக்கணிப்பான் மனிதன் ஆனால்

தன் உணர்வை வெளிப்படுத்துவதில் அந்த

பிரமனை மிஞ்சிப் பிரமிக்கச் செய்வான்!

ஹர்ஷினி ஸ்ரீனிவாசன்

# சிறுவர்களிடம் பேசுவது எப்படி?



இந்த ஊரில் வளரும் சிறுவர்களிடம் பேசுவது மிகவும் கடினமாகி விட்டது. என்னைக் கேட்டால் அதற்கு பெரிய காரணம் பெரியவர்கள் என்பேன். ஒரு குழந்தையைப் பார்த்தால் கேட்கும் முதல் கேள்வி பள்ளிக்கூடம் எப்படி இருக்கு. ஆங்கிலத்தில் “How is school”?
அதற்கு குழந்தைகள் ஒரே வார்த்தையில் பதிலளிப்பார்கள்.
Fine.
Good.
Awesome.
பிறகு, ஆளை விடு சாமி என்று ஓடிவிடுவார்கள்.
ஏன், குழந்தைகளிடம் பேசுவது அவ்வளவு கஷ்டமா?

## நீ மூடிக்குத்தானே போற?

ஒரு குழந்தையை வெளியே பார்க்கும்போது அந்த குழந்தை என்ன வகுப்பு என்று கேட்டு, ஆறு, ஏழு, எட்டு என்று ஏதாவது அந்தக் குழந்தை சொல்லிவிட்டால், அடுத்து பாயும் கேள்வி!

அந்தக் குழந்தை மூடி நடுநிலைப் பள்ளிக்கு போகிறதா இல்லையா என்று தெரிந்து கொண்டே ஆக வேண்டும். அந்தக் குழந்தையின் மனநிலையைப் பற்றி சற்று யோசித்துப் பாருங்கள். இப்படிக் கேட்கும் பெரியவர்களிடம் எந்தக் குழந்தை பேசும்?

அடுத்த கேள்வி - கிரேட் எல்லாம் நன்றாக வாங்குகிறாயா (அல்லது) எல்லாத்துலயும் ஏ தானே?

சிரிக்காதீர்கள். இப்படி கேட்கும் நபர்கள் நிறையவே உண்டு.



முதலில் இந்த மாதிரி கேள்விகள் கேட்பதை தவிர்ப்பது நல்லது. குழந்தையிடம் நீங்கள் பேசுவதைவிட அந்தக் குழந்தையை உங்களிடம் பேச வைக்க வேண்டும்!
அந்தக் குழந்தைக்கு என்ன பிடிக்கும் என்பதை தெரிந்து கொள்ள அதை நேரடியாகவே கேட்கலாம். அதிலும் எந்தத் துறை என்று நீங்களாகவே பட்டியல் போட்டுக் கேட்காதீர்கள்.

உனக்கு சங்கீதம் பிடிக்குமா, நாட்டியம் பிடிக்குமா, படிக்கப் பிடிக்குமா, ஓவியம் வரையப் பிடிக்குமா, தமிழ் சினிமா பிடிக்குமா.... இந்த மாதிரி கேள்விகள் வேண்டாம்.

அதுவும் உங்களுக்குப் பிடித்ததை அந்தக் குழந்தைக்கும் பிடிக்கிறதா என்று ஆராய வேண்டாம். அதை கொஞ்சம் மாற்றிக் கொண்டாலே போதும்.

## ஒரு உதாரணத்திற்கு

கே: உனக்கு பிடித்த விஷயம் எது? எப்படி பொழுது போக்குவாய்?
அந்தக் குழந்தை சொல்லும் துறையில் உங்களுக்கு அனுபவம் உண்டு என்றால் உங்கள் பிரதாபங்களை அளக்காதீர்கள். உங்களுக்கும் பிடிக்கும் என்று சொல்லிவிட்டு அந்த துறை சம்பந்தமாக சிறு சிறு கேள்விகள். அந்தக் குழந்தை பேச வேண்டும். அதுதான் முக்கியம்.

அந்தத் துறை உங்களுக்கு தெரியாவிட்டால், தெரியாது என்று சொல்லிவிட்டு அதைத் தெரிந்து கொள்ள கேள்விகள் கேளுங்கள். அதிலும் அந்தத் துறையில் என்ன சாதித்தாய் போன்ற கேள்விகளைத் தவிர்ப்பது உத்தமம்.

அந்தத் துறையை எள்ளி நகையாடாமல் இருப்பது மிகவும் உத்தமம்.

நிறைய குழந்தைகள் இப்போது வீடியோ கேம் ஆடுகிறார்கள். அதைக் கேலி செய்ய வேண்டாம். உங்களுக்கு அதில் அறிமுகம் இருந்தால் அதைப் பற்றி கேளுங்கள். என் பிள்ளைகள் மீன் பிடிப்பதில் ஆர்வம் காட்டியபோது சில நண்பர்கள் கேட்டது - வேற நம் குழந்தைகள் யாரும் மீன் பிடிக்கல, இவங்க மட்டும் எப்படி? நம் குழந்தைகள் இதுதான் செய்ய வேண்டும் என்று ஏதாவது பட்டியல் இருக்கிறதா என்ன? நேற்று வந்த செய்தி. **மாலினி தத்தா என்ற 15 வயது பெண் டீப் ரன் பள்ளியில் அமெரிக்க கால்பந்தாட்ட அணியில் விளையாட இருக்கிறாள்.** அதுவும் ஆண்கள் மட்டுமே ஆடிவந்த அணியில்!



அனைவரும் கால் பந்தாட்டம், டென்னிஸ் ஆடும்போது, ஒரு நண்பரின் மகள் பேஸ் பால் ஆடுகிறாள்.

குழந்தைக்குப் பிடித்த விஷயங்களில் ஏதேனும் ஒன்றில் உங்களுக்கு அறிமுகம் இருந்தால் நல்லது. அந்தக் குழந்தைக்கு கதைப் புத்தகங்கள் பிடிக்கும் என்றால் எந்த மாதிரி கதைகள், பிடித்த எழுத்தாளர் என்று கேட்கலாம். அதில் ஏதாவது உங்களுக்கு அறிமுகம் இருந்தால் அதைப் பற்றி கேட்கலாம். அந்தப் புத்தகத்தை விவரிக்கச் சொல்லலாம். இது மாதிரி கேட்டு நான் தெரிந்து கொண்ட செய்திகள் அனேகம். ஒரு பிள்ளை அவன் சமீபத்தில் படித்த கதையில் இருந்து நேதன் ஹேல் என்ற அமெரிக்க சுதந்திரப் போராட்டத்து உளவாளி குறித்து சொன்னான். ஒரு பெண் தாய்லாந்தில் இருந்து வந்து ஒரு அமெரிக்கக் குடும்பத்துடன் தங்கிய பெண் குறித்த கதை சொன்னாள். பெண் விடுதலை குறித்து படிக்கும் பிள்ளைகள், ஹாரி பாட்டர் போன்ற கதைகள் படிக்கும் பிள்ளைகள் - இவர்களிடம் இருந்து நாம் நிறைய விஷயங்கள் தெரிந்து கொள்ளலாம். நான் புத்தகம் படிக்கும் பழக்கமுள்ள குழந்தைகளிடம் கேட்கும் முதல் கேள்வி - நீ கடைசியாக எந்தப் புத்தகம் படித்தாய்?

தொலைக்காட்சியில் எந்த காட்சி பிடிக்கும் என்று கேட்கலாம்.



நீங்கள் எப்போதும் கேட்கும் கேள்வியையே கொஞ்சம் மாற்றலாம். பள்ளிக்கூடம் எப்படி போகிறது என்று கேட்காமல் - உன்னை உன் பள்ளிக்கு பிரின்சிபல் ஆக்கினால், என்ன செய்வாய்? வகுப்பறையில் என்ன என்ன இருந்தால் நன்றாக இருக்கும்? இது போன்ற கேள்விகள் அவர்களைப் பேசத் தூண்டும். அவர்களின் குழந்தைத்தனத்தையும், குறும்பையும் கொண்டு வரும்.

நீ மூடிக்குப் போகிறாயா என்று கேட்காமல், நீ எந்தப் பள்ளியில் படிக்கிறாய் என்று கேளுங்கள்.

குழந்தைக்கு பிடித்த விஷயம் என்ன என்று தெரிந்து கொண்ட பிறகு, அதன் தொடர்பான சிறு சிறு கேள்விகள் கேட்கலாம். அந்தக் குழந்தை உங்களிடம் தயக்கமில்லாமல், கூச்சப்படாமல் பேச வேண்டும். அதுதான் உங்களுக்கு வேண்டியது. குழந்தை பியானோ கற்றுக் கொள்கிறது என்றால்,

என்ன பாடல் எல்லாம் வாசிப்பாய் என்று கேட்கலாம். “FOOR ELIS” வாசிக்கத் தெரியுமா என்று கேட்டு நம் மேதாவித்தனத்தை காட்ட வேண்டாம்.

இன்னொரு முக்கியமான விஷயம்.

குழந்தைகளிடம் சாதாரணமாகப் பேசுங்கள். இரண்டு மூன்று வயதைத் தாண்டிய குழந்தைகளிடம் மழலையில் பேச வேண்டாம்! குரலை மாற்றிப் பேச வேண்டாம். மற்ற பெரியவர்களிடம் பேசுவது போல பேசுங்கள்.

அந்தக் குழந்தையிடம் தமிழில்தான் பேசி சாதிக்க வேண்டும் என்று முடிவு கட்டிக்கொண்டு ஆரம்பித்தால், பேசாமல் இருப்பதே உத்தமம். அதற்கு அவர்களின் பெற்றோர்கள் இருக்கிறார்கள். அந்தக் குழந்தை எந்த மொழியில் உங்களிடம் சரளமாக பேசுகிறதோ, அந்த மொழியில் பேசுங்கள்.



அந்தக் குழந்தையை மறுபடியும் பார்க்கும்போது விட்ட இடத்தில் இருந்து தொடருங்கள். எல்லாவற்றையும் மறந்து போய் ஆரம்பித்தால், "மறுபடியும் மொதல்ல இருந்தா"!!! என்று குழந்தை ஓடிவிடும். இப்படித்தான் ஒரு பெண்ணை ஒவ்வொரு முறை பார்க்கும்போதும் கோடைக்காலத்தில் என்ன செய்கிறாய் என்று கேட்டேன். மூன்றாம் முறை கேட்டபோது, இதற்கு முன்னால் இரண்டு முறை சொல்லி விட்டேன் என்றாள். பிறகு என்னைப் பார்த்தாலே நக்கலாக சிரித்து விட்டு பதுங்கி விடுவாள். அதையே நீங்கள் தமாஷாக கேட்கலாம். ஆனால் அதற்கும் நினைவிருக்க வேண்டும்!

இந்த ஊரில் வளரும் குழந்தைகள் அப்படித்தான் கேட்பார்கள். சுதந்திரமாக அவர்கள் கருத்தை வெளிப்படுத்தி பழக்கம் ஆனவர்கள். தப்பில்லை. ஆகவே மூக்கை உடைத்துக் கொள்ள தயாராக இருக்க வேண்டும்.

இதுவே நம் ஊரில் வளர்ந்த குழந்தையிடம் இப்படிப் பேசினால் என்ன ஆகும் தெரியுமா?

நீ முடிக்குத்தானே போற?

ஆமாம். நீங்க மூடிட்டு போங்க!

[அண்மையில் நான் இணையத்தில் படித்த கட்டுரையின் தாக்கம்தான் இந்தக் கட்டுரை]

- நாகு பரசு

# எனது பார்வையில் அமெரிக்கா

(நொளம்பூர் - கண்ணன்)

என் மதிப்பிற்கும் பாசத்திற்கும் உரிய கதம்பம் இதழின் வாசகர்களே! வணக்கம். நான் சென்ற வருடம் அமெரிக்கா வந்தபோது இங்கே என்னைக் கவர்ந்த நிகழ்ச்சிகளையும் அதனால் கிடைத்த அனுபவங்களையும் தங்களுடன் பகிர்ந்து கொண்டேன். நான் எதிர்பார்த்ததை விட அதிக அளவில் உங்கள் ஆதரவினைப் பெற்றேன். மேலும் இந்தியாவிலும் பலர் எனது தொடரைவிரும்பிப் படித்து வந்தனர் என்ற செய்தி எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. நான் சென்ற வருடம் இந்தியா திரும்பும் நேரம் இந்த தொடரை நிறுத்தி விட்டு உங்களிடமிருந்து விடை பெறலாம் என்று எண்ணியபோது தமிழ்ச் சங்கப் பொறுப்பாளர்களும் கதம்பம் ஆசிரியர் குழுவும் என்னிடம் நீங்கள் இந்தியாவில் இருந்துகொண்டே உங்கள் படைப்புகளை அனுப்பலாம் என்று தெரிவித்ததும் என்னைக்கவர்ந்த வைரவரிகள், என் கவிதைகள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன. இதற்கிடையே நானே எதிர்பாராத வகையில் இவ்வருடம் மீண்டும் அமெரிக்கா வரும் வாய்ப்பு கிட்டியது. அதனால் "எனது பார்வையில் அமெரிக்கா" தொடர் மீண்டும் இந்த இதழிலிருந்து உங்கள் ஆதரவுடன் தொடர்கிறேன்.

எனது கடைசி மகன் திருமணமாகி சென்னை நகரில் ஒரு கம்பியூட்டர் கம்பெனியில் மேலாளராக இருந்தார். அவருக்கு இவ்வருடம் அமெரிக்கா விசா கிடைத்தவுடன் அவர் கம்பெனி அவரை வாஷிங்டன் நகரில் பணி உத்தரவு கொடுத்தனர். அவரும் மனைவி மகனுடன் மார்ச் '23-ல் அமெரிக்கா வந்து பணியில் சேர்ந்து விட்டார். அவர் இங்கு வந்தது முதல் என்னையும், என் மனைவியையும் அமெரிக்கா வரும்படி வற்புறுத்தினார். கடைசியாக எங்கள் பயணம் உறுதியானது.

(அடுத்த பக்கம் பார்க்க)

நாங்கள் சென்னையிலிருந்து அமெரிக்கா செல்ல இரவு 9-00 மணிக்கு புறப்படும் கத்தார் ஏர்வேஸ் விமானத்தில் டிக்கெட் முன்பதிவு செய்திருந்தோம். நானும் என் மனைவியும் செல்வதால் விமானநிலையம் செல்ல எங்கள் காரை எடுக்காமல் ஒரு வாடகைக் காரினை மாலை 4 மணிக்கு புக் பண்ணியிருந்தோம். எங்கள் லக்கேஜ்களை 3½ மணிக்கே வாசலுக்கு கொண்டு வந்துவிட்டோம். மாலை 4-45 ஆகியும் கார் வரவில்லை. கார் கம்பெனி முதலாளியிடம் என்னசார் – இன்னும் வண்டி வரவில்லையே! 4 மணிக்கு அனுப்புகிறேன் என்று உறுதியளித்தீர்களே என்று எங்கள் அவசரத்தை அவரிடம் சொன்னோம். நான் காலை 4 மணி என்று தவறாக புரிந்து கொண்டு 4 P.M என்பதற்கு பதிலாக 4. A.M.க்கு புக் பண்ணிவிட்டேன் என்றாரே பார்க்கலாம்!! எனக்கு சப்த நாடியும் நின்று விட்ட மாதிரி ஒரு பிரமை. நான் உடனே அவரிடம். பரவாயில்லை. என்ன செய்வீர்களோ எனக்குத் தெரியாது. இன்னும் 30 நிமிடங்களில் வண்டி வரவேண்டும் என்றேன். அவரும் ஒப்புக் கொண்டு சொன்னபடி 5-15க்கு வண்டி வந்தது. அவசர அவசரமாக லக்கேஜ்களை ஏற்றி அப்பாடா என்று நிம்மதிப் பெருமூச்சுடன் காரில் கிளம்பினோம். கார் புதியதாக இருந்ததால் டிரைவர் எங்களை சரியான நேரத்திற்கு கொண்டு விடுவார் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. யார் கண் பட்டதோ! தெரியவில்லை. சுமார் 5 கிலோ மீட்டர் சீறிப்பாய்ந்து சென்ற வண்டி எஞ்சின் கோளாறு காரணமாக நின்று விட்டது. எண்பது வயதை இன்னும் 1 மாதத்தில் நெருங்கும் எனக்கும், எழுபத்தி இரண்டு வயதான என் மனைவிக்கும் தலை சுற்றியது. இன்று விமான நிலையத்திற்கு சரியான நேரத்திற்குச் சென்று விமானத்தில் ஏறுவோமா என்ற

(அடுத்த பக்கம் பார்க்க)

சந்தேகம் ஏற்பட்டது. ஒரு வழியாக 10 நிமிடங்களில் காரை சரிசெய்து ஓட்டுநர் எங்கள் அவசரத்தை உணர்ந்து "ஒன்றும் சார். கவலைப்படாதீர்கள் உங்களை இன்னும் 30 நிமிடங்களில் விமானநிலையத்தில் இறக்கி விடுகிறேன்" என்று நம்பிக்கையூட்டினார். சொன்னதைப்போல் 6-15க்கு எங்களை இறக்கிவிட்டார். அவரே இரண்டு டிராலிகளை எடுத்து வந்து எங்கள் லக்கேஜ் எல்லாவற்றையும் ஏற்றி நுழைவு வாயில் வரை தள்ளிக் கொண்டு வந்து எங்களை வழியனுப்பினார். லக்கேஜ்களை கவுண்டரில் ஒப்படைத்து முடித்ததும் எங்களை வீல்சேரில் ஏற்றி அனைத்து செக்கிங்குகளையும் எளிதே முடித்து விமானம் வாசல் வரை வந்து எங்களை விமானத்தில் ஏற்றிவிட்டனர். விமானம் தோஹா விமான நிலையம் வந்தவுடன் வீல்சேரில் வந்தவர்களை தனியாக வேன் மூலம் ஏற்றி அடுத்த விமான ஏறும் இடத்தில் கொண்டு வந்து விட்டனர். விமானம் தோஹாவிலிருந்து அமெரிக்கா புறப்பட்டு அதே நாள் காலை 9-30க்கு வாஷிங்டன் விமான நிலையம் வந்தடைந்தது. இந்த விமான நிலையத்தில் எங்களைப்போல் 80க்கு மேற்பட்டோர் வீல் சேரில் வந்ததால், பொது வரிசையில் எங்களுக்கு செக்கிங் பண்ணாமல், இந்த இடங்களுக்காக இரண்டு தனி கவுண்டர்கள் அமைத்திருந்ததால் 30 நிமிடங்களில் எங்கள் செக்கிங் முடிந்து லக்கேஜ்களை டிராலியில் ஏற்றி வாசல்வரை கொண்டு வந்து விட்டார்கள். விமான நிலையத்தின் வாசலில் என் இளைய மகன் வந்து வரவேற்று அவன் இல்லத்துக்கு அழைத்துச் சென்றான்.

மீண்டும் அடுத்த மாதம் இதழில் சந்திப்போம்.

இவண்

நொளம்பூர் — கண்ணன்.

F/o K. வெங்கடேஸ்வரன்.

# ஒரு காதல் முடிவு

முன் சென்றாய் பின் தொடர மறுத்து
திரும்ப மறந்தாய் கண்களின் விபத்தைத் தவிர்த்து
பேச்சைத் தவிர்த்தாய் உண்மையை அறிந்து
என்னை அறிந்தாய் குழப்பத்தைப் புறக்கணித்து
பலரை புறக்கணித்தாய் வாழ்க்கையை அடைந்து
துணையை அடைந்தாய் உறவுகளை இழந்து
செல்வங்களை இழந்தாய் காதலை உணர்ந்து
எதிர்காலத்தை உணர்த்தாய் துணிவு பிறந்தது
இருஉயிராய் பிறந்தாய் மறுபடியும் உணர்ந்து
அதிசயத்தை உணர்ந்தாய்  நிகழ்வுகளை இழந்து
நேரத்தை இழந்தாய் அறிவை அடைந்து
மேன்மை அடைந்தாய் அகங்காரத்தை
புறக்கணித்து
முடிவுகளைப் புறக்கணித்தாய் ரகசியத்தை
அறிந்து
நினைவுகளை அறிந்தாய் கண்ணீரை தவிர்த்து
தத்துவத்தைத் தவிர்த்தாய் முதுமையை மறுத்து!

ஹர்ஷினி ஸ்ரீனிவாசன்

# ஜெயிலர்

திரைவிமர்சனம்




-மெய்யப்பன்



நான் விவரம் தெரிந்த நாள் முதல், சூப்பர் ஸ்டாரின் ரசிகன் என்ற முறையில், 'ஜெயிலர்' திரைப்படத்தை என்னுடைய பார்வையில் எப்படி இருந்தது என்பதை உங்களுடன் பகிரும் நோக்கத்தில், ஆவலுடன் இந்த விமர்சன கட்டுரையை எழுதியுள்ளேன்.

இந்த படத்தில் பெரிய நட்சத்திர கூட்டம் இருக்கிறது என்றாலும், ரஜினி படத்தின் விமர்சனத்தை ரஜினியிடமிருந்து தொடங்குவதுதானே முறை. இந்த படத்தில், நாம் எதிர்பார்த்தது போலவே, ரஜினி ஒரு ஜெயிலர் அவதாரம் எடுத்திருக்கிறார். போலீசில் வேலை பார்க்கிற தன்னோட மகன், ஒரு சிலை கடத்தல் கேசில் மாட்டி மறைந்து விடுகிறார். இதற்கு பழி வாங்கும் அவதாரம்தான் இந்த 'ஜெயிலர்' அவதாரம். மொத்த படத்தையும் தன்னுடைய தோளில் தாங்கி, silent+violent ஆக நடித்திருக்கிறார் ரஜினி என்று சொன்னால் அது மிகையல்ல.



படம் முழுவதும், ஏகப்பட்ட ஸ்டார் காஸ்டிங்... மோகன்லால், ஜேக்கி ஷெராப், சிவ ராஜ்குமார், ரம்யா கிருஷ்ணன், யோகி பாபு, சுனில், VTV கணேஷ், தமன்னா, கிஷோர்! Pan-India மூவி என்பதற்காக ஒரு ஸ்டேட்டுக்கு ஒரு நடிகர் என்ற ரீதியில் நடிர்கர்களையும், அவர்களுக்கான கதாபாத்திரங்களையும் அமைத்திருக்கிறார்கள். விநாயகம் தான் படத்தில் பிரதான வில்லன். மிக அற்புதமாக மிரட்டியிருக்கிறார்.

படத்தில் குறை என்று சொல்லவேண்டும் என்றால், வன்முறை காட்சிகள் சற்று அதிகமாக, இளைய தலைமுறை பார்வையாளர்களை திசை திருப்பும் விதமாக அமைக்கப்பட்டிருக்கின்றன.


சுருக்கமாக சொல்லவேண்டும் என்றால், இது ரஜினியின் தனித்துவமான நடிப்பு, மற்றும் நெல்சன்-ஸ்டைல் direction ஆகியவை இரண்டற கலந்த ஒரு வித்யாசமான கலவை. இது நன்றாக workout ஆகியிருக்கிறது என்றே சொல்லவேண்டும். குறிப்பாக, ரஜினியை இங்கு பாராட்டியே ஆக வேண்டும், ஒரு 'தாத்தா' கதாபாத்திரத்தில்கூட ஸ்டைலிஷான நடிப்பை வெளிப்படுத்தியதை கண்டிப்பாக, சூப்பர் ஸ்டாரின் ஒவ்வொரு ரசிகரும் கொண்டாடியிருப்பார்கள். 'படையப்பா' படத்தில், ஒரு காட்சியில், ரம்யா கிருஷ்ண சொன்னது போல், ரஜினிக்கு வயசானாலும், அந்த அழகும் ஸ்டைலும் இன்னும் கொஞ்சம் கூட குறையவே இல்லை என்பதை மீண்டும் ஒரு முறை உறுதி செய்திருக்கிறார் சூப்பர் ஸ்டார். அவருக்கான ரசிகர் கூட்டத்தை, அப்படியே இன்றுவரை தக்கவைத்திருக்கிறார்.

இப்படத்தில், குறைகள் சில இருந்தாலும், நிறைகள் நிறையவே இருக்கின்றன. சூப்பர் ஸ்டாரின் ரசிகர்கள் மட்டுமல்லாமல், பொது ஜன ரசிகர்களும் ரசிக்கும் வகையில் இருக்கிறது என்றே சொல்லவேண்டும்.

இது ஒரு ரஜினி படம் என்று சொல்வதை போல், நெல்சனின் படம் என்று சொன்னாலும், அதில் தவறில்லை என்றே தோன்றுகிறது. அந்த அளவிற்கு, நெல்சனின் direction, இந்த படத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நெல்சன் ஸ்டைல் dark காமெடி, அவருடைய ஆஸ்தான டீம் என்று அவருக்கே உண்டான விஷயங்களை காம்ப்ரமைஸ் பண்ணாமல், ஒரு மாஸ் மூவி கொடுத்திருக்கார். Hats off நெல்சன் !!

படத்தின் முதல் பாதி விறுவிறுப்பாகவும், அதே சமயம் dark comedy கலவையாலும் கனஜோராக சென்று விடுகிறது. வினாயகன் பத்து ரூபாய் வாங்கும் வரை அந்த கதாபாத்திரம் மிகவும் வலிமையாகவும் மிரட்டலாகவும் இருந்தது, பத்து ரூபாய் வாங்கியவுடன் அந்த கதாபாத்திரத்தின் வீரியம் சற்றே குறைந்து விட்டது. படத்தின் இரண்டாம் பாதியில் சற்று சறுக்கினாலும், இறுதி கட்டங்களில் சூடு பறக்கிறது. அதுவும் சிவராஜ் குமார், மோகன் லால் இருவரும் ரஜினியோடு கூட்டாக சுருட்டை பற்ற வைக்கும் காட்சி, அபாரமான மாஸ்!! தியேட்டரில் பலத்த கரகோஷம்.

அனிருத்தின் பின்னனி இசை படத்திற்கு மிகப்பெரிய பலம். காவாலா பாடல், இன்றைய இளைய சமுதாயத்தின் புதிய கீதமாகிருப்பதே இதற்கு சாட்சி. (மன்னிக்கவும். இசைஞானியின் உண்மை பக்தன் என்ற முறையில், இதற்கு மேல் என்னால் அனிருத்தின் இசையை வருணிக்க இயலவில்லை) !!



# ஓவியப் போட்டி

## புகைப்படங்கள்

























# போட்டி நடுவர்கள்















# குழந்தைகளின் ஓவியங்கள்































SCHOOL










Happy Independence Day!
I love India






Lotus
Krish



Aadhi


# தமிழ்ப்பள்ளி இனிதாக தொடங்கியது!!!











**சிவசக்தி அறிவுக்கண்ணன்**

# நன்றி உரை

கதம்பம் இதழில் தங்கள் கதை, கட்டுரை, கவிதை மற்றும் பல பயனுள்ள விஷயங்களை இரிச்மண்டு சமூகத்துடன் பகிர்ந்து கொண்ட அனைத்து எழுத்தாளர்களுக்கும் தமிழ்ச்சங்க நிர்வாக குழுவின் மனமார்ந்த நன்றிகள்.

All submissions for Kadambam/கதம்பம் should be emailed to newsletter.rts@richmondtamilsangam.org by the 15th of each month.

## நன்றி!

செய்திமடலை சரிபார்த்து வெளியிட உதவிய மார்செலின், சந்தானம், சுபபாபு, ஸ்ரீ லதா, இளமாறன் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றிகள் மற்றும் எங்கள் செய்திமடலுக்கு ஆதரவளித்த அனைத்து RTS குழு உறுப்பினர்கள் மற்றும் அனைவருக்கும் நன்றி.


## Feedback

இந்த மாத செய்திமடல் பற்றி கருத்து தெரிவிக்க கீழே உள்ள இணைப்பை பயன்படுத்தவும்

**Click Here!**

**newsletter.rts@richmondtamilsangam.org** எனும் மின்னஞ்சலிலும் எங்களை தொடர்பு கொள்ளலாம். நன்றி!


United
Real Estate
Richmond
Ravi Gutta
804-991-0269
RaviGutta09@gmail.com
Find Your Freedom

Maharajah
Indian Asian Groceries & Halal Meat

RVA
Physical Therapy
Sports Rehab
Aquatic Therapy

Tech Gurukul
Education Changes Lives
www.techgurukulusa.com
Python • Java • AWS • Data Science

The Peacock Montessori
info@thepeacockmontessori.com
5404 Bennett Ln, Glen Allen, VA

SHORT PUMP HOME & REAL ESTATE
KUMAR RAMANATHAN
LICENSED REALTOR


Faith Devapalan
BSM, MA, MED, EDS, EDD
804-300-3106
Piano | Guitar | Vocal | Teacher

AEKTA CHAWLA
OWNER & PRINCIPAL BROKER
UNMATCHED SERVICE
zriliant

KUMON
KUMON MATH & READING CENTERS
Kala Ramesh
GLEN ALLEN - CROSS RIDGE

searchblox

RAMS PAAN SHOP
Call
8047545543
Party Orders and
Individual orders accepted

SOUTHERN STARS
Believe

(804)931-1265
(804)862-1323
johnson@fathomrealty.com
www.homeswithjohnson.com
REALTOR®
FATHOM

Indian Pastry House
Indian Fast Food & Bakery Cafe
3409 Old Parham Rd,
Richmond, VA - 23294
Ph: 804-332-5751

Suvaj
Delicious
Idly & Dosa

With Best Compliments From
Apsaras Arts Dance Group
Director and Choreographer
Uma Chetty
umachetty@gmail.com

INDIAN KITCHEN

Vishali Kachiraju, CPA
Richmond, VA

RICHMOND TAMIL SANGAM

ஒற்றுமையே உயர்வு

## website:

www.richmondtamilsangam.com

## contact us:

richmondtamilsangam@gmail.com
newsletter.rts@richmondtamilsangam.org
tamilschool@richmondtamilsangam.org